
பெயர்: ____________________ தேதி: ____________

வகுப்பு: St. ______________ 4 மதிப்பெண்: ___ / 20

நேரம் : 40 நிமிடங்கள்

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு <u>70 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை எழுது. படத்தொடரின் அடியில் உதவிச்சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| மிகவும் கூட்டமாக | குழந்தையின் அழுகை |
| கையில் குழந்தையுடன் | எரிச்சலுடன் |
| தெரியாதது போல | திடீரென்று நின்றது |
| இடம் தரவில்லை | நிலை தடுமாறி |

 P4 SA2

# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 4

NAME : ---------------------------

CLASS : ____________________

DATE : ______________________ MARKS மதிப்பெண்

| | |
|---|---|
| | 45 |

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

ஆசிரியர் கூறும்வரை தேர்வுத்தாளைத் திருப்பக்கூடாது.
விளக்க்கங்களைக் கவனமாகப் படிக்கவும். பெற்றோர் கையொப்பம்:

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவும். Parents's Signature: ___________

## Paper - 1

வேற்றுமை உருபுகள் (8)
கீழ்க்காணும் பத்தியில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கேற்ற பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது.

வெயில் சுட்டெறித்ததால் ஒரு யானைக்குட்டி மரநிழலில் நின்று கொண்டிருந்தது. அப்போது ஓர் எறும்பு அவ்வழியாக ஊர்ந்து வந்தது. (1) _____________ சிறிய உருவத்தைப் பார்த்து யானைக்குட்டி கேலி செய்தது. ஆனால், எறும்போ அமைதியாகத் தன் (2) _______________ திரும்பியது. அது அங்கிருந்த மற்ற (3) _____________ நடந்ததைச் சொன்னது. சினமடைந்த எறும்புகள் யானைக்குட்டி நின்ற இடத்திற்குச் சாரை சாரையாகப் படையெடுத்து வந்தன. அப்போது யானைக்குட்டி ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. எறும்புகள் ஒன்று சேர்ந்து (4) _____________ கடிக்கத் தொடங்கின. யானைக்குட்டி திடுக்கிட்டு எழுந்தது.

Q1.
(1) எறும்பின்
(2) எறும்பிற்கு
(3) எறும்பை
(4) எறும்பிடம் ( )

Q2.
(1) புற்றின்
(2) புற்றை
(3) புற்றுக்கு
(4) புற்றில் ( )

Q3.
(1) எறும்புகளுக்கு
(2) எறும்புகளோடு
(3) எறும்புகளால்
(4) எறும்புகளிடம் ( )

Q4.
(1) யானைக்குட்டியின்
(2) யானைக்குட்டியை
(3) யானைக்குட்டியால்
(4) யானைக்குட்டியுடன் ( )

**<u>செய்யுள் / பழமொழி (10 மதிப்பெண்கள் )</u>**

**பின்வரும் செய்யுள்களில் / பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.**

Q5. பெருமையும் ____________ தான் தர வருமே.

(1) வறுமையும்
(2) சிறுமையும்
(3) பொறுமையும்
(4) பகைமையும் ( )

Q6. ______________ அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

(1) உண்டிக்கு
(2) மந்திரிக்கு
(3) அரசர்க்கு
(4) அறிஞர்க்கு ( )

Q7. எறும்பு ஊரக் ____________ தேயும்.

(1) பாறையும்
(2) கல்லும்
(3) மலையும்
(4) பாதையும் ( )

Q8. ஆழம் அறியாமல் ______________ இடாதே .

(1) காலை
(2) பாதத்தை
(3) கையை
(4) விரலை ( )

Q9. சுடினும் செம்பொன் தன்னொளி _____________ .

(1) விடாது
(2) சுடாது
(3) கெடாது
(4) படாது ( )

தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள் )

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

மாலா என்ற பத்து வயது மாணவி, தான் தயாரித்த படக் காட்சியை வகுப்பு முன் வந்து படைத்தாள். ஆசிரியரும் மற்ற மாணவர்களும் அவளைப் பாராட்டினார்கள். அவளுக்குப் பெருமையாக இருந்தது. வீட்டிற்குச் சென்றதும் மாலா தன் பெற்றோரிடம் நடந்ததைக் கூறினாள். அவள் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

மறு நாள் மாலாவின் பெற்றோர் அவளுக்கு ஒரு பரிசு கொடுத்தார்கள். அது ஓர் இயந்திரமனிதக் கருவி. அதைக் கண்ட மாலா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். மாலா அந்த இயந்திரமனிதக் கருவிக்குக் 'கிமி' என்று பெயர் வைத்தாள்.

கிமி, அவள் சொன்ன வேலைகளை எல்லாம் செய்தது. அது அவளுடைய அறையைச் சுத்தம் செய்தது; அவளுடன் கணினி விளையாட்டுகளை விளையாடியது. மாலா ஓய்வு நேரத்தை எல்லாம் கிமியுடனேயே கழித்தாள். குடும்பத்தினருடன் பேச அவளுக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஒரு நாள், மாலாவின் ஆசிரியர் வீட்டுப்பாடம் கொடுத்தார். கிமி அவளுக்கு அந்தப் பாடத்தைச் செய்து கொடுத்தது. மறுநாள் மாலா அதைத் தன் வகுப்பின் முன் படைத்தாள். எல்லாரும் கைதட்டி அவளைப் பாராட்டினார்கள். ஆனால், அந்தப் பாராட்டுகள் மாலாவுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. தான் பாடத்தைச் செய்யவில்லையே என்று எண்ணி அவள் கவலைப்பட்டாள்.

பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

Q10. மாலா ஏன் பெருமை அடைந்தாள்?

(1) அவள் தயாரித்த படக்காட்சியை பெற்றோர் பாராட்டியதால்
(2) அவள் தயாரித்த படக்காட்சியை அனைவரும் பாராட்டியதால்
(3) அவள் தயாரித்த படக்காட்சியை ஆசிரியர் பாராட்டியதால்
(4) அவள் தயாரித்த படக்காட்சியை மாணவர்கள் பாராட்டியதால் ( )

Q11. மாலா எப்போது மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள் ?

(1) தன் பெற்றோரிடம் நடந்ததைச் சொன்னபோது
(2) இயந்திரமனிதக் கருவி வேலைகள் செய்தபோது
(3) அவள் பெற்றோர் அவளுக்குப் பரிசு தந்தபோது ( )
(4) அவள் இயந்திரமனிதக் கருவியைக் கண்டபோது

Q12. கிமி மாலாவுக்கு எவ்வாறு உதவியது ?

(1) கணினி விளையாட்டுகளைக் கற்றுக் கொடுக்க
(2) அவளின் குடும்பத்தினருடன் பேசி மகிழ
(3) எல்லா வேலைகளையும் செய்ய ( )
4) ஓய்வு நேரத்தைப் பெற்றோருடன் கழிக்க

Q13. குடும்பத்தினரோடு பேச மாலாவுக்கு ஏன் நேரம் கிடைக்கவில்லை ?

(1) அவள் கிமியுடன் அதிக நேரத்தைக் கழித்ததால்
(2) அவள் தன் அறையிலேயே இருந்ததால்
(3) அவளுக்கு நிறைய வேலைகள் இருந்ததால் ( )
(4) அவள் கணினி விளையாட்டு விளையாடியதால்

Q14. பாராட்டுகள் ஏன் மாலாவுக்கு மகிழ்ச்சி தரவில்லை?

(1) வீட்டுப்பாடம் சிறப்பாக இல்லாததால்
(2) வீட்டுப்பாடத்தை அவள் செய்யாததால்
(3) வீட்டுப்பாடத்தைக் கிமி செய்யாததால் ( )
(4) வீட்டுப்பாடத்தை கிமி படைக்காததால்

சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

Q15 முதல் Q18 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

Q15. பாராட்டினார்கள் -
1. ஏசினார்கள்
2. துன்புறுத்தினார்கள்
3. கண்டார்கள்
4. புகழ்ந்தார்கள் ( )

Q16. வேலைகளை -
1. பழமொழிகளை
2. கவிதைகளை
3. பணிகளை
4. கட்டளைகளை ( )

Q17. அளிக்கவில்லை -
1. தேடவில்லை
2. கொடுக்கவில்லை
3. வாங்கவிலலை
4. தாங்கவில்லை ( )

Q18. கவலைப்பட்டாள் -
1. வெட்கப்பட்டாள்
2. வருத்தப்பட்டாள்
3. வேதனைப்பட்டாள்
4. சந்தோஷப்பட்டாள் ( )

*கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (6 மதிப்பெண்கள்)*

# புத்தகக் கண்காட்சி

இடம் : ஜாலோங் சமூக மன்றம்

நாள் : 28.10.2012


நேரம் : காலை 9 முதல் மாலை 5 மணி வரை

கதைப்புத்தகங்களுக்கு 40% கழிவு அளிக்கப்படும்

சிறுவர் முதல் முதியவர் வரை படிக்கக்கூடிய பல வகை நூல்களை வாங்கலாம்

50 வெள்ளிக்கு மேல் புத்தகம் வாங்குவோருக்கு 10% கழிவு வழங்கப்படும்

முதலில் வருகை புரியும் 100 பேருக்கு அன்பளிப்புகள் வழங்கப்படும்.



இக்கண்காட்சி தேசிய நூலக மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| |
|---|
| விளம்பரத்தை கவனமாகப் பார்த்துவிட்டுக் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. |

19. புத்தகக்கண்காட்சியில் எப்படிப்பட்டப் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன?

(1) சிறுவர் முதல் முதியவர் வரை படிக்கும் நூல்கள்
(2) சிறுவர் படிக்கும் நூல்கள்
(3) முதியவர் படிக்கும் நூல்கள்
(4) மாணவர் படிக்கும் நூல்கள் ( )

20. 40% கழிவு எந்தப் புத்தகங்களுக்கு வழங்கப்படும்?

(1) எல்லா வகைப் புத்தகங்களுக்கும்
(2) வரலாற்றுப் புத்தகங்களுக்கு
(3) சிறுவர் புத்தகங்களுக்கு
(4) கதைப் புத்தகங்களுக்கு ( )

21. இக்கண்காட்சி யாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(1) ஜூரோங் சமூக நிலையத்தினரால்
(2) இந்தியர் நற்பணிக் குழுவினரால்
(3) சமூக நிலைய ஏற்பாட்டாளரால்
(4) தேசிய நூலக மன்றத்தினரால் ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

| |
|---|
| பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் ***எண்ணை*** அடைப்பினுள் எழுது. (5ம) |

பள்ளி மணி ஒலித்தது. மாணவர்கள் எல்லாரும் இடைவேளைக்கு விரைந்தனர். மாறன் மட்டும் வகுப்பறையில் இருந்தான். எல்லாரும் சென்றதும் மாறன் வெண்பலகையில் (22) ____( )____ ஆரம்பித்தான். அச்சமயத்தில், பள்ளிச் சட்டாம்பிள்ளையான ராமு (23) ____( )____ வகுப்பைறையையும் பார்வையிட்டுக்கொண்டு வந்தான். மாறனும் ராமுவும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள். ராமு தன் அறையினுள் நுழைந்தான். அவன் மாறனின் செயலைக் கண்டு (24) ____( )____ அடைந்தான். ராமு உடனே, "மாறன் நீ என்ன செய்கிறாய்? இது தூய்மையான வகுப்பு வாரம் என்பதை மறந்துவிட்டாயா? ஆசிரியர்கள் எல்லா வகுப்பறைகளையும்
(25) ____( )____ செய்வார்கள். அப்போது நம் வகுப்பறை
(26) ____( )____ இருந்தால் நமக்கு விருது கிடைக்காது என்பது உனக்குத் தெரியாதா? " எனக் கேட்டான். ராமு தன் செயலை எண்ணி அவமானம் அடைந்தான்.

| | |
|---|---|
| 1.வெட்கம் | 5.துடைக்க |
| 2.சோதனை | 6.ஒவ்வொரு |
| 3.அசுத்தமாக | 7.தூய்மையாக |
| 4.கிறுக்க | 8.அதிர்ச்சி |

ஒலி வேறுபாடு
கோடிட்ட இடத்தை நிரப்பு. **(6ம.)**

27. மாறனின் ______________________பை கனமாக இருந்தது.

(பல்லி, பள்ளி)

28. அம்மா காய்கறிகளை ______________________ தட்டில் வைத்தார்.

(அரிந்து, அறிந்து)

29. அம்மா கோழியைப் ______________________.

(பொறித்தார், பொரித்தார்)

30. ______________________ மலர் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

(அள்ளி, அல்லி)

31. முரளி எல்லாருக்கும் உதவி செய்யும் நல்ல ______________________ உடையவன்.

(மணம், மனம்)

32. ஊரிலிருந்து வந்த என் பாட்டி என்னை ______________________ கொண்டார்.

(அனைத்து, அணைத்து)

**5. சுயவிடைக் கருத்தறிதல் (9 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது.**

தோட்டக்காரன் ஒருவன் தோட்டம் ஒன்றை கவனித்து வந்தான். ஒரு குரங்குக் கூட்டம் மரங்களில் வசித்து வந்தது. அந்தக் குரங்குகள் தோட்டக்காரன் செய்யும் வேலைகளை கூர்ந்து கவனித்தன. தோட்டக்காரன் தினமும் செடிகளுக்கு நீர் ஊற்றுவான். அவன் செய்வதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் குரங்குகளும் அதே மாதிரியான வேலைகளைத் தோட்டத்தில் செய்யும். விளையாட்டாக அவை செய்யும் வேலைகள் தோட்டக்காரனுக்கு வேடிக்கையாக இருந்தது. சம்பளம் கொடுக்காமல் தனக்கு உதவி கிடைப்பதில் அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

ஒரு நாள் தோட்டக்காரன் சந்தைக்குப் போக விரும்பினான். அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அந்தக் குரங்குகளே எல்லாத் தோட்ட வேலைகளையும் சரியாகச் செய்துவிடும் என்று அவன் நம்பினான். தோட்டக்காரன் அங்கிருந்து சென்றவுடன், குரங்குகள் ஒவ்வொரு செடியாக வேரோடு பிடுங்கிப் பார்த்தன. அதனால், வேர் முறிந்து பல செடிகள் வாடி விட்டன. அன்று மாலை வீடு திரும்பிய தோட்டக்காரன் நடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான். குரங்குகளை நம்பியது தன் முட்டாள்தனம் என்பதைத் தோட்டக்காரன் உணர்ந்தான். தன் செயலுக்காக அவன் வருந்தினான்.

33. தோட்டக்காரன் தினமும் என்ன செய்வான்? (1 மதிப்பெண்)

34. குரங்குகளின் செயலைக் கண்ட தோட்டக்காரன் ஏன் மகிழ்ச்சி அடைந்தான்? (2 மதிப்பெண்கள்)

35. சந்தைக்குப்போன தோட்டக்காரன் குரங்குகள் என்ன செய்யும் என்று எதிர்பார்த்தான்? (2 மதிப்பெண்கள்)

36. குரங்குகள் செடியைப் பிடுங்கியதால் என்ன நேர்ந்தது? (2 மதிப்பெண்கள்)

37. தோட்டக்காரன் இறுதியில் எதை உணர்ந்தான்? (2 மதிப்பெண்கள்)

P4

<u>விடைகள்</u> **TESTPAPER 7**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (1) | 2. (3) | 3. (4) | 4. (2) | |
| 5. (2) | 6. (4) | 7. (2) | 8. (1) | 9. (3) |
| 10. (2) | 11. (4) | 12. (3) | 13. (1) | 14. (2) |
| 15. (4) | 16. (3) | 17. (2) | 18. (2) | |
| 19. (1) | 20. (4) | 21. (4) | | |
| 22. (4) | 23. (6) | 24. (8) | 25. (2) | 26. (3) |
| 27. பள்ளி | 28. அரிந்து | 29. பொரித்தார் | 30. அல்லி | |
| 31. மனம் | 32. அணைத்து | | | |

<u>சுயவிடைக் கருத்தறிதல்:</u>

33. தோட்டக்காரன் தினமும் செடிகளுக்கு நீர் ஊற்றுவான்..

34. சம்பளம் கொடுக்காமல் தனக்கு உதவி கிடைப்பதில் அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

35. சந்தைக்குப் போன தோட்டக்காரன் குரங்குகள் எல்லாத் தோட்ட வேலைகளையும் சரியாகச் செய்துவிடும் என்று எதிர்பார்த்தான்.

36. குரங்குகள் செடிகளைப் பிடுங்கியதால், வேர் முறிந்து பல செடிகள் வாடின.

37. தோட்டக்காரன் குரங்குகளை நம்பியது தன் முட்டாள்தனம் என்பதை இறுதியில் உணர்ந்தான்.